சிலுவைத்
தியானம்

ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். மத்.16:24

கடைசியாகப்
பார்த்தது

# சிலுவை என்றால் என்ன?

# What’s the meaning of the Cross?

# சிலுவை என்று நாம் நினைப்பது

- ✓ அடையாளம் - சர்ச்/கிறிஸ்தவர்கள்...
- ✓ கிறிஸ்தவர்கள் கழுத்தில் அல்லது தாலியில் அணிந்து கொள்வது...
- ✓ நெற்றியல் போட்டுக் கொண்டால் காத்து கறுப்பு அண்டாது...
- ✓ அல்லது பேய் - பிசாசுகளை விரட்டும் ஒரு மந்திரக்கோல்...

# இன்னும் .........

- பிற மதத்தவர் பார்வையில் பக்தியைக் குறிக்கும் சின்னம்
- நோய்கள், அடங்காத பிள்ளைகள், குடிகாரக் கணவன், பொருளாதாரப் பிரச்னைகள்...
- கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கையை குறிக்கும் ஒரு சின்னம் - இயேசுவின் மீது விசுவாசம் வைக்கும் போது...

உண்மையில்
சிலுவையின்
அர்த்தம்
இது
தானா?
இல்லை
எனில்
சிலுவையின்
அர்த்தம்
என்ன?

The Cross is a great
contradiction
சிலுவை பெரிய
முரண்பாடு நிறைந்தது

மரணமும் ஜீவனும்

வெறுப்பும் அன்பும்

வன்முறையும் சமாதானமும்

குற்றச்சாட்டுகளும் மன்னிப்பும்

பாவமும் பரிசுத்தமும்

உடைக்கப்படுதலும் உருவாக்கப்படுதலும்

இழப்பும் மீட்பும்

அழிவும் புணரமைப்பும்

தோல்வியும் வெற்றியும்

**கோர மரணமும் நித்திய வாழ்வும்**

இனி இன்று

# சிலுவையைப் பற்றி இயேசு என்ன சொல்கிறார்?

# சிலுவை என்றால்
# “தன்னைத் தான் வெறுப்பது”




ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் **தன்னைத் தான் வெறுத்து,** தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.

(மத்.16:24, மாற். 8:34)

# சிலுவை என்பது
# "உறவுகள் மற்றும் சொத்துக்களை இழப்பது"

"என்னிமித்தமாகவும்,
சுவிசேஷத்தினிமித்தமாகவும்,
வீட்டையாவது,
சகோதரரையாவது,
சகோதரிகளையாவது,
தகப்பனையாவது, தாயையாவது,
மனைவியையாவது,
பிள்ளைகளையாவது,
நிலங்களையாவது விட்டவன்
எவனும்" (மாற். 10:29)

# சிலுவை என்றால்
# "சொந்த ஜீவனையும் வெறுப்பது"

"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும், தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு சிஷனாயிருக்கமாட்டான்"

(மாற். 10:29)

# சிலுவை என்றால்
# “அநீதியான தீர்ப்பு, பரியாசம், பாடு, மரணம்”

மனுஷகுமாரன் பிரதான ஆசாரியாரிடத்திலும், வேதபாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார், அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, புறத்தேசத்தாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள். அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர் மேல் துப்பி, அவரைக் கொலை செய்வார்கள்.

(மாற். 10:33, 34)

## சிலுவை என்றால்
## "அனுதினமும் சுமந்து, இயேசுவைப் பின்பற்றுவது"

ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்.

(லூக்.9:23)

சிலுவை என்பது
"நிலையான ஒன்றைப் பெற்றுக் கொள்ள நிலையற்ற ஒன்றை விடுவது"

இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான்

(மாற்.10:30)

## சிலுவை என்றால்
## “இயேசுவுக்கு பாத்திரனாய் மாறுவது”

# தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றாதவன் எனக்கு பாத்திரனல்ல.

(மத்.10:38)

# சிலுவை என்பது

“தன்னைத் தான் வெறுப்பது”

“உறவுகள் மற்றும் சொத்துக்களை இழப்பது”

“சொந்த ஜீவனையும் வெறுப்பது”

“அநீதியான தீர்ப்பு, பரியாசம், பாடு, மரணம்”

“அனுதினமும் சுமப்பது, இயேசுவைப் பின்பற்றுவது”

“நிலையானதைப் பெற்றுக் கொள்ள
நிலையற்றதை விடுவது”

“இயேசுவுக்கு பாத்திரனாய் மாறுவது”